ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1775 - 2012 සැප්තැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2012.09.07

*1775 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1145 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1149 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1144 | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** *(i) ரணவிரு சேவா அதிகார சபை (திருத்தம்) சட்டமூலம் 2012, யூலை மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(ii) பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஓகத்து மாதம் 3 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***கவனிக்க.-*** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2009 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஏப்பிறல்-யூன்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2013

*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத்தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2012.09.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*2. கள்ளு குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப்பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக இலச்சினை பொறிக்கப்பட்ட கடித உறையொன்றில் இட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைமனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச்செய்ய முடியும்.*

*3. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப்பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப்பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2012.09.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.*

*5. எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.*

*6. மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2012.11.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.*

*7. இச்சலுகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிதியில் இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாகச் செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.*

*8. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றபோது அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின், அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.*

*எச். எம். எல். எஸ். ஹேரத்,*
*பிரதேச செயலாளர்,*
*திவுலப்பிட்டிய.*

*பிரதேச செயலகம்,*
*திவுலப்பிட்டிய,*
*2012.08.17.*

### அட்டவணை

| இலக்கம் | தவறணை யின் இலக்கமும் பெயரும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 27 - தாகொந்த | திவுலப்பிட்டிய | தாகொநந்த | முற்பகல் 11.00<br>பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00<br>பிற்பகல் 8.00 | 4,000 | 2012.09.25<br>முற்பகல் 10.30 |

9-242

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு நீதிமன்ற வலய பிரசித்திபெற்ற நொத்தாரிசு இ. க. அபேசிங்ஹ என்பவரால் 2000.05.25 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 6324 ஆம் இலக்க பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் அற்றோணி தத்துவப்பத்திரப் புத்தகத்தில் 4334 ஆம் இலக்கத்தின்கீழ் 210 ஆம் பிரிவு 122 ஆம் பக்கத்தில் 2006.06.01 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள அற்றோணி தத்துவப்பத்திரத்தின் மூலம் பொன்னம்பெரும ஆரச்சிகே தயாவதி ஆகிய என்னால் இங்குருவத்தை கு/வட்டரெக்க இலக்கம் 10 இல் வசிக்கும் பொன்னம்பெரும ஆரச்சிகே சிரிசேன பொன்னம்பெரும என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்து வலுவிழக்கச்செய்து இதன்பின் அந்த அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் தகுதியையும் இரத்துச்செய்யப்பட்டு விட்டதாக இத்துடன் அறியத்தருகிறேன்.

பொன்னம்பெரும ஆரச்சிகே தயாவதி.

9-55

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 9(1) ஆம் பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : போர்ச்சுன் பீஸ்ல்ட்ஸ் லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீபி 5041
*கம்பனியின் முகவரி* : இல. 100/1, ஶ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய

சீ. எஸ். எமானுவல்,
கம்பனி செயலாளர்.

2012, யூலை 27.

9-59/1

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 9(1) ஆம் பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : கிறீன் வீவ் ஹொரிஸன் லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீபி 5042
*கம்பனியின் முகவரி* : இல. 100/1, ஶ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய

சீ. எஸ். எமானுவல்,
கம்பனி செயலாளர்.

2012, யூலை 27.

9-59/2

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) இன்கீழ் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

ஜோர்ஜ் ஸ்ருவேர்ட் ஏவியேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் முன்னர் ஸ்ருவேர்ட்டேயர் (பிறைவேட்) லிமிட்டெட்
(கம்பனி பதிவு இல. பீவீ 2989)

ஸ்ருவேர்ட்டேயர் (பிறைவேட்) லிமிட்டெட் (முன்னைய பெயர்) அதன் பெயரை ஜோர்ஜ் ஸ்ருவேர்ட் ஏவியேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் என்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 8 இன் பிரமாணங்களுக்கு அமைய (கம்பனி பதிவு இல. பீவீ 2989) 18.07.2012 இல் மாற்றம் செய்துள்ளது என்றும் கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி ''ஸ்ருவேர்ட் ஹவுஸ்'', இல. 45, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்றும் இப்பொது அறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

ஜோர்ஜ் ஸ்ருவேர்ட் அன்ட் கம்பனி லிமிட்டெட்,
கம்பனிக்கான கம்பனி செயலாளர்கள்.

''ஸ்ருவேர்ட் ஹவுஸ்'',
இல. 45, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

9-128

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவன சட்டமூல விதிக்கு அமைவாக 9(1)இ ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தை நிறுவன மயமாக்குவது பற்றி அறிவிக்கப்படுகின்றது :-

*நிறுவனத்தின் பெயர்* : ஸ்கைலைன் இம்போட்ஸ் என்ட் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*நிறுவனத்தின் இலக்கம்* : பீவீ 82756
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 1ஏ-24, ஜெயவர்த்தனகம, பத்தரமுல்லை

எல். எஸ். எஸ். திலக்கரட்ன,
கம்பனி செயலாளர்.

9-56

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

காலி, தலாபிட்டிய, அப்துல் வஹாப் மாவத்தை, இல. 14 எனும் இடத்தில் வதியும் பிரியன்தா குமுதுனீ குலதுங்க ஆகிய என்னால் காலி, தலாபிட்டிய, அப்துல் வஹாப் மாவத்தை, இல. 14 எனும் இடத்தில் வதியும் மாபலகம அமராவதி எனும் மாபலகம பிரேமவதீ என்பவருக்கு

அதிகாரமளிக்கப்பட்ட காலி மாவட்ட பிரசித்திபெற்ற நொத்தாரிசான எஸ். எஸ். எம். நிலாம் அவர்கள் எழுதி சான்றிதழளிக்கப்பட்ட 1296 ஆம் இலக்க 2010.02.17 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து தத்துவமிழக்கச் செய்வதை இதன் மூலம் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

பிரியன்தா குமுதுனீ குலதுங்க.

9-64

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவன சட்டமூல விதிக்கு அமைவாக 9(1) ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தை நிறுவன மயமாக்குவது பற்றி அறிவிக்கப்படுகின்றது :-

*நிறுவனத்தின் பெயர்* : ஸ்கைலைன் லொஜிஸ்ட்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*நிறுவனத்தின் இலக்கம்* : பீவீ 79416
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 8/2/5, பிறிஸ்டல் கட்டிடம், பிறிஸ்டல் வீதி, கொழும்பு 1

எல். எஸ். எஸ். திலக்கரட்ன,
கம்பனி செயலாளர்.

9-57

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன் பிரகாரம் கீழ்க்குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 02.08.2012 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர்* : ஜே. ஈ. பீ. ஒஸ்ட்ரேலியா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 87408
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 604, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு 15

மெனேஜ்மென்ட் அன்ட் பிசினெஸ் எட்வைசரி
சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் பீபி 259,
கம்பனி செயலாளர்கள்.

9-58

---

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்தவர்களும் தற்போது 6/30-34, பிறின்ஸ் வீதி, ஓட்லண்ட், நியூ சவுத் வேல்ஸ் 2117, அவுஸ்திரேலியாவில் வசிப்பவர்களுமாகிய துரையப்பா கந்தசாமி அவர் மகன் கந்தசாமி சிவரஞ்சன் ஆகிய நாங்கள் பொது மக்களுக்கு இத்தால் அறிவிப்பதாவது-

எங்களது "கரம்பன் வளவு", லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய் காணியை விற்கும் பொருட்டு எங்களால் உசன், மிருசுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகரன் என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட காணி சம்பந்தமாக சின்னத்தம்பி சிவகரனால் எதுவும் செய்யப்படின் அவற்றிற்கு நாம் பொறுப்புடையவராக மாட்டோமென்பதையும் அறியத்தருகின்றோம்.

துரையப்பா கந்தசாமி,
கந்தசாமி சிவரஞ்சன்

9-62

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : ஆர். எச். எச். இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 87338
*பதிவுத் திகதி* : 2012.07.31
*பதிவு முகவரி* : இல. 500/ஏ, டலுவகொட்டுவ, கொச்சிக்கடை

கம்பனி செயலாளர்கள்.

9-63

---

**பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : ஹைபதியா வன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 86335
*பதிவுத் திகதி* : 2012.06.05
*பதிவு முகவரி* : இல. 16, சட்டத்தரணிகள் அலுவலக கட்டிடத் தொகுதி, கோட்டை, மாத்தறை

ஈ. எம். ஜீ. ஜீ. மஹானாம,
கம்பனி செயலாளர்.

9-40

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) இன்கீழ் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்**

ஜோர்ஜ் ஸ்ருவேர்ட் ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் முன்னர் ஜோர்ஜ் ஸ்ருவேர்ட் (ரீஸ் அன்ட் மார்க்கெட்டிங்) (பிறைவேட்) லிமிட்டெட்

**கம்பனி பதிவு இல. பீவீ 6614**

ஜோர்ஸ் ஸ்ருவேர்ட் (ரீஸ் அன்ட் மார்க்கெட்டிங்) (பிறைவேட்) லிமிட்டெட் (முன்னைய பெயர்) அதன் பெயரை ஜோர்ஜ் ஸ்ருவேர்ட் ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 8 இன் பிரமாணங்களுக்கு அமைய (கம்பனி பதிவு இல. பீவீ 6614) 12.07.2012 இல் மாற்றம் செய்துள்ளது என்றும் கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி "ஸ்ருவேர்ட் ஹவுஸ்", இல. 45, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 என்றும் இப்பொது அறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

ஜோர்ஜ் ஸ்ருவேர்ட் அன்ட் கம்பனி லிமிட்டெட்,
கம்பனிக்கான கம்பனி செயலாளர்கள்.

"ஸ்ருவேர்ட் ஹவுஸ்",
இல. 45, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

9-49

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : ட்ரீம் பேபி மார்க்கெட்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 84413
பதிவுத் திகதி : 2012.02.22
பதிவு முகவரி : இல. 138ஏ, பொருளை வீதி, தெபானம, பன்னிப்பிட்டிய

எஸ். பி. லியனகே,
கம்பனி செயலாளர்கள்.

9-43

---

**அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்**

யக்கல, அம்பகஹலந்த, இல. 74 இல் குடியிருக்கும் யோகஸ்ரீ உதயலால் உடகெதர ஆகிய நான், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய பீ. லியனகம அவர்களால் 21.06.1996 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 1318 என்ற அற்றோணி தத்துவப்பத்திரம் மூலமாக யக்கல, அம்பகஹலந்த, இல. 74 இல் குடியிருக்கும் மஹிந்த லால் உடகெதரவிற்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச்செய்கிறேன் மஹிந்த லால் உடகெதர என்பவர் 06.07.2012 ஆந் திகதி தொடக்கம் எனது சார்பில் புரியப்படும் ஏதேனும் செயல்களுக்கு நான் பொறுப்பு கூறமாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவித்தல் தருகிறேன்.

யோகஸ்ரீ உதயலால் உடகெதர.

9-15/1

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : ஸென் ஏரீஎம் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 87197
பதிவுத் திகதி : 20.07.2012
பதிவு முகவரி : இல. 47/47, பெரேரா மாவத்தை, பெலவத்தை, தலங்கம தெற்கு

சார்ட் பிசினெஸ் சிஸ்டெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

9-17/1

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : எஷ்நொக் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 78916
பதிவுத் திகதி : 19.05.2011
பதிவு முகவரி : இல. 72/20 ஏ, பி, தமுனுபல மாவத்தை, கண்டி

சார்ட் பிசினெஸ் சிஸ்டெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

9-17/2

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி, கிரிபத்கும்புர, 3 ஆம் இலக்கத்தைச் சார்ந்தவரும் 642861417வீ என்ற தேசிய அடையாள அட்டையை உடையவருமான யோகஸ்ரி உதய லால் உடகெதற ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். கே. மணதுங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3 ஆம் இலக்கமும் 1994, பெப்புருவரி 23 ஆந் திகதியுமுடையதும் கண்டி, கிரிபத்கும்புர, 3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த மஹிந்த லால் உடகெதற என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை 2012, யூலை 6 ஆந் திகதியிலிருந்து இல்லாதொழித்து இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதிலிருந்து எனது சார்பில் மேற்கூறப்பட்ட மஹிந்த லால் உடகெதற என்பவரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல் களுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன்.

யோகஸ்ரி உதய லால் உடகெதற.

2012.07.23.

9-15/2

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*கம்பனியின் பெயர்* : யுனிசெல் எக்ரோ வரையறுக்கப்பட்ட (தனியார்) கம்பனி
*கம்பனி இலக்கம்* : பீவீ 86986
*பதிவுத் திகதி* : 10.07.2012
*பதிவு முகவரி* : இல. 60, காசப்ப வீதி, கொழும்பு 5

கம்பனி செயலாளர்.

9-115

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : அரோவெக்ஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 67765
*பதிவு முகவரி* : இல. 58/14, பாடசாலை அவெனியூ, நாவலை
*பதிவுத் திகதி* : 11.05.2009

*கம்பனியின் பெயர்* : மேக்ஸ்டோர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 78367
*பதிவு முகவரி* : இல. 239-1/1, கொரி வீதி, தெஹிவளை
*பதிவுத் திகதி* : 18.04.2011

*கம்பனியின் பெயர்* : நேடேக் லேபல்ஸ் அன்ட் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 62460
*பதிவு முகவரி* : இல. 150, கிருலபன அவெனியூ, கொழும்பு 5
*பதிவுத் திகதி* : 07.12.2007

கம்பனி செயலாளர்.

9-193

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : ஏசியா ஹொரய்ஷன் ட்ரவல்ஸ் (பிவிடி) எல்டிதி
*கம்பனி இலக்கம்* : பீவீ 87478
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 07.08.2012
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : லெவல் 06, மெக்ளரனஸ் பில்டிங், இல. 123, பௌத்தா லோக மாவத்தை, கொழும்பு 4

ஏசியா ஹொரய்ஷன் ட்ரவல்ஸ் (பிவிடி) எல்டிதி,
கம்பனி இயக்குநர்.

2012.08.08.

9-207

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : லாப்ஸ் பேரரேஜர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 87172
*பதிவுத் திகதி* : 20.07.2012
*பதிவு முகவரி* : இல. 14, ஆர். ஏ. த மெல் மாவத்தை, கொழும்பு 4

பணிப்பாளர் சபை பணிப்பின் பேரில்,

சட்டத்தரணி கீர்த்தி பத்திராஜ,
கம்பனி செயலாளர்.

9-209

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான பகிரங்க அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்* : அய்லண்ட் ஸ்குபா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 87574
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 9/2, ஹெஜஸ் கோர்ட் ரெஸிடன்ஸீஸ், 18, ஹெஜஸ் கோர்ட், கொழும்பு 10

கம்பனி செயலாளர்.

9-221

---

**ஒருங்கிணைப்பு அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 239 ஆம் பிரிவின்கீழ் நிவறினா ஹொட்டேல்ஸ் பீஎல்சீ (ஆர். எச். எல்.) மற்றும் பாம் கார்டின்ஸ் பீஎல்சீ (பாம்) ஆகியவற்றின் நிறைவேற்று அதிகாரிகளால் பாம் கார்டின்ஸ் பீஎல்சீ உடன் நிவறினா ஹொட்டேல்ஸ் பீஎல்சீயை ஒருங்கிணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

இவ் ஒருங்கிணைப்பின் பிரகாரம், ஆர். எச். எல். இன் சகல பங்குகளும் கையளிக்கப்பட்டு பங்குதாரர்களுக்கு ஒவ்வொரு இரண்டு (2) ஆர். எச். எல். பங்கிற்கு, பாம் பங்கு ஒன்று (1) என்ற வீதத்தில் வழங்கப்படும். பங்குக்கூறுகள் எனும் சந்தர்ப்பம் எழுதும்போது, குறித்த பங்கு முழுமையாக்கப்பட்டு அல்லது பொருத்தமான பின்னத்தில் குறிப்பிட்ட கம்பனி பங்கின் இறுதிப் பங்கு வர்த்தக தினத்தின் சந்தைப் பெறுமதியில் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்ந்து பாம் கார்டின்ஸ் ஹொட்டேல்ஸ் பீஎல்சீ ஆகவும் தற்போதைய பாம் நிர்வாக இயக்குனர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனி இயக்குனர்களாகவும் செயற்படுவர்.

கம்பனி ஒருங்கிணைப்பு, பங்குதாரர்கள் ஒப்புதலுக்கு முன்வைக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்படின் 2012, ஒற்றோபர் 12 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும். 2012, ஒற்றோபர் 5, வெள்ளிக்கிழமை பங்கு வர்த்தக தின இறுதியில் ஆர். எச். எல். பங்குதாரர்கள் தமது பங்குகளைக் கையளித்து பாம் பங்குகளாகக் கைமாற்றிக்கொள்ளலாம்.

நிர்வாக சபை கட்டளைக்கமைய,

பாம் கார்டின்ஸ் ஹொட்டேல்ஸ் பீஎல்சீ,
நிவறினா ஹொட்டேல்ஸ் பீஎல்சீ,
செல்வி சீ. எஸ். இமானுவேல்,
கம்பனி செயலாளர்.

9-243

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் நியமங்களுக்கு ஏற்ப கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : மேர்ச்சன்ற் கிறடிற் ஒவ் ஸ்ரீலங்கா லிமிட்டெட்
*கம்பனியின் புதிய பெயர்* : எம்சீஎஸ்எல் பினான்சியல் சேவிசெஸ் லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீபி 61
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : 11 ஆவது மாடி, பேங்க் ஒப் சிலோன் மேர்ச்சன்ற் ரவர், இல. 28, சென். மைக்கேல்ஸ் வீதி, கொழும்பு 3
*பெயர் மாற்றத் திகதி* : 2012, யூலை 6

மேற்படி கம்பனியின் சார்பில்,

மேர்ச்சன்ற் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா பீஎல்சீ.

பிஓசீ மேர்ச்சன்ற் ரவர்,
இல. 28, சென். மைக்கேல்ஸ் வீதி,
கொழும்பு 3.

9-205

---

# ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ**

(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்த்தன வங்கி என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க அசையாச் சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் கையிருப்புக்களின் ஏல விற்பனை**

***494 மற்றும் 344 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பள்ளே பத்துவே, தெஹிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட இரத்மலானை தெற்கு 1 ஆவது ஒழுங்கை, இல. 11 மற்றும் 11/1 என்னுமிடத்தில் அமைந்துள்ள "இரத்மலானை எஸ்ட்டேட்" என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் எம். ஜே. சேதுங்க அவர்களால் வரையப்பட்ட 1984 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட 2319 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். ஆர். பெர்னாந்து அவர்களால் வரையப்பட்ட 1952 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 363 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு பி3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள மீள் அளவை செய்யப்பட்ட) பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0று. 15பே.)**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பள்ளே பத்துவே, தெஹிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைகளுக்கு**

*உட்பட்ட இரத்மலானை தெற்கு 1 ஆவது ஒழுங்கை, இல. 11 மற்றும் 11/1 என்னுமிடத்தில் அமைந்துள்ள "இரத்மலானை எஸ்ட்டேட்" என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் எம். ஜே. சேதுங்க அவர்களால் வரையப்பட்ட இல. 11 மற்றும் 11/1, முதலாவது ஒழுங்கை, இரத்மலானை எனும் முகவரியைக் கொண்ட 1984 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட 2319 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிப்பிடப் பட்டுள்ள (அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். ஆர். பெர்னாந்து அவர்களால் வரையப்பட்ட 1952 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 363 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு பி3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள மீள் அளவை செய்யப்பட்டு பிரிக்கப்பட்ட) பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப் பட்டதுமான காணித்துண்டு*

*(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 15.5பே.)*

*மேலே கூறப்பட்ட இரத்மலானை தெற்கில் அமைந்துள்ள "இரத்மலானை எஸ்ட்டேட்" என அழைக்கப்படும் 2319 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4 (14 அடிப் பாதைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட) எனக் குறிப்பிடப்பட்டுள்ள (363 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு பி3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள மீள் அளவை செய்யப்பட்டு பிரிக்கப்பட்ட) பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டது மான காணித்துண்டு*

*(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 5.5பே.)*

**இயந்திர உபகரணங்கள் பற்றிய விபரம்**

| | *விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|
| 1. | ஹம்பா யுனிடோஸ் பக்கேஜிங் மெஷீன் மொடல் ஆர்ரீஇசட் 158எல் | 01 |
| 2. | டொப்வக் ஒட்டோமெட்டிக் போர்ம் பில் ஷீல் மெஷீன் 502ஆர் | 01 |
| 3. | லிஸ்டர் ஜெனரேட்டர் 35கேவீஏ | 01 |
| 4. | யொன்கி ஸ்கிறீன் பிரின்டின் மெஷீன் | 01 |
| 5. | காப்பிஜியானி பொப்சிகல் மெஷீன் | 01 |
| 6. | லோகல் ஸ்கிறீன் பிரின்டிங் மெஷீன் | 01 |
| 7. | மேர்க் பெக் ஸ்ரிங் பெக்கேஜிங் மெஷீன் மாதிரி இல. எல் டயிப் ஷீலர் | 01 |
| 8. | மேத்தா வேர்டிகல் பவுச் போர்மின் மெஷீன் | 01 |
| 9. | கொஸ்மோ பிலிஸ்டர் போர்மின் அன்ட் கட்டிங் மெஷீன் | 01 |
| 10. | சன்யோ கோல்ட் ரூம் 90எப்-2414-புரோபெப் | 01 |
| 11. | ஏவீசீ கென்டினியூஸ் பெல்ட் ஷீலர் | 01 |
| 12. | பொப்சிகல் மெஷீன் 51+பீ கென்டன்சர் மற்றும் ஹேர்மிடிக் (உள்நாட்டு) | 01 |
| 13. | கொல்செஸ்டர் லேத் மெஷீன் - யூகே | |
| 14. | கேனிங்க் மெஷினரி மெட்டல் பொக்ஸ் - ஷீமர்ஸ் மற்றும் றிபோர்மஸ் | 01 |
| 15. | பெக்கோ இஞ்ஜக்சன் மொடியூலிங்க் மெஷீன் வித் மொடியூல் | 01 |
| 16. | எப்ஜீ வில்சன் ஸ்டம்பர்ட் ஜெனரேட்டர் 120 கேவீஏ - ஒட்டோ ஸ்டார்ட் | 01 |
| 17. | ஏகேஆர் டேர்மோபோர்மிங்க் மெஷீன் வித் மொடியூல் | 01 |
| 18. | ஏகேஆர் பெலட் மிக்சர் | 01 |
| 19. | இன்கசோல் எயார் கொம்பிரசர் டயிப் 30 மாதிரி 3000 சீ/இசட்எம் | 01 |
| 20. | ஏகேஆர் ஹயிஸ்பீட் கிரைன்டர் | 01 |
| 21. | லிட் பிரின்டின் மெஷீன் | 01 |
| 22. | ஏகேஆர் டேர்மோபோர்மிங்க் மெஷீன் வித் மொடியூல் | 01 |
| 23. | இலிக் ஹயிஸ்பீட் டேர்மோபோர்மர் - டயிப் ஆர்டிஎம் 37/10 (ஜேர்மன் 1991) | 01 |
| 24. | ஒஸ்மோ 3 - கலர் ஒப்செட் கப் பிரின்டிங் மெஷீன் டயிப் டிஎம்/19 இத்தாலி (1991) | 01 |
| 25. | இன்கசோல் - றேன்ட் எயார்கூல்ட் ரூ ஸ்டட்ஸ் ரெசிபுரோகேட்டின்ங் எயார் கம்பிரசர் டயிப் 30 மொடல் எச்150 ரீஎன் (சிங்கப்பூர் 1991) | 01 |
| 26. | வன்செட் ஒப் ஹொட் போர்மிங் டயி போர் போர்மிங் ஒப் கப் லிட் (உள்நாட்டு 1991) | 01 |
| 27. | பிளாஸ்டிக் ஷீட் மேக்கிங் பிளான்ட் (இந்தியா 1994) | 01 |
| 28. | டேர்மோ பிளாஸ்டிக் எக்ஸ்ரூஷன் பிளான்ட் (இந்தியா 1996) | 01 |
| 29. | பேப்பர் கப் மெஷீன் (இந்தியா 2003-2005) | 01 |

**493 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட கையிருப்புக்களின் விவரணம்**

இங்கு குறிப்பிடப்படும் மொத்தமான வர்த்தகக் கையிருப்புக்களும், வர்த்தகப் பொருட்களும், ஏனைய பொருட்களும், மூலப்பொருட்களும் நடைமுறையிலுள்ள வேலைகளும், முடிவடைந்த மற்றும் முடிவடையாத பொருட்களும் உள்ளடங்கலாக-

*மூலப்பொருட்கள்.-* பிளாஸ்டிக் கரண்டி - சிறியது, பிளாஸ்டிக் கரண்டி - பெரியது, பொலிஸ்டயிரின் ஷீட், ஸ்ரோ கப் லிட்ஸ் , பொலிஸ்டயிரின் ஸ்கிரப், ஆடை நீக்காத பால் மா, ஆடை நீக்கிய பால் மா, திரவ குளுக்கோஸ், ஜெலட்டின், சோள மா, அச்சிடும் மை, சீனி, ஸ்னெக் பெலட், பீவீசி ஷீட், கல்சர் பெக்கட், வெனிலின் பிளேவர், முட்டை மஞ்சள் நிற தூள், குளுக்கோல் பரல், லோஸ் தினர் - றிராடர், பொலிமர் ஷீட், ஐ. பீ. ஏ. டிரம்ஸ், முந்திரிகை விதை, முள்ளுக்கரண்டி மற்றும் கரண்டி (செற்) ஸ்டயிரோபோம் லஞ்ச் பொக்ஸ், பேப்பர் கப் பேப்பர், ஸ்ரயிரோலக்ஸ் பெலட், ஜீ. பீ. பீ. எஸ். பெலட்ஸ், மாஸ்டர் பெச்.

*பொதிசெய்யும் பொருட்கள்.-* டபிள் சயிட்ஸ் கம் டேப் ரோல், டிக் டக் இறப்பர், பிறீட் இறப்பர், இறப்பர் போர் ஸ்ரிங்க் இறப்பர், லிடின் மெட்டிரியல்ஸ், பொலித்தீன் பில்ம்ஸ் (மிக்ஸ் சயிஸ்), பொலித்தீன் பாக் (மிக்ஸ் சயிஸ்), அச்சிடப்பட்ட யோகட் கோப்பைகள், புரூட் அன்ட் நட், அச்சிடப்பட்ட யோகட் கோப்பைகள் - பழவகை, அச்சிடப்பட்ட டிறிங்கிங் யோகட் உறைகள், கொரகேட்டட் கார்போட் பொக்ஸ் (அசோர்ட்), அச்சிடப்பட்ட கடதாசி பெட்டி (கலவை), அச்சிடப்பட்ட பொலித்தீன் பாக், அச்சிடப்பட்ட பிளங்கெட், டெப்லோன் டேப், அச்சிடப்பட்ட யோகட் கப் (சாதாரணம்).

*முடிவுப் பொருட்கள்.-* டிறிங்கிங் கப் 140 மி. லீ., டிறிங்கிங் கப் 160 மி. லீ., டிறிங்கிங் கப் 200 மி. லீ (தடிப்பான), டிறிங்கிங் கப் 200 மி. லீ. அச்சிடப்பட்டது, டிறிங்கிங் கப் 325 மி. லீ. அச்சிடப்பட்டது, டிறிங்கிங் கப் 325 மி. லீ. யோகட் கப் மூடி, ஸ்கலோப் கப், ரீ. ஆர். பி. டிசயின் கப் 125 மி. லீ. ரீ. ஆர். பீ., யோகட் கோப்பைகள், ரீ. ஆர். பீ., யோகட் கோப்பை மூடிகள் - ரீ. ஆர். பீ. சோஸ் கப் - வெள்ளை, அச்சிடப்பட்ட யோகட் கோப்பைகள் - தனி நிறம், அச்சிடப்பட்ட யோகட் கோப்பைகள் - இரு நிறங்களில், அச்சிடப்பட்ட யோகட் கோப்பைகள் - மூன்று நிறங்களில், உணவுப் பெட்டிகள் - பொலிஸ்டயிரின், டிவயிடட் மீல் டிரே, 8 அங்குல சேர்விங் பிலட், 6 அங்குல சேர்விங் பிலட், 250 மீ. லீ. கிண்ணங்கள்,

350 மி. லீ. கிண்ணங்கள், 500 மி. லீ. கிண்ணங்கள், கிண்ணங்களுக்கான மூடிகள், கிண்ணங்களுக்கான மூடிகள் - ரீ. ஆர். பீ., ஸ்வீற் பொக்ஸ், ஜெலடின் 250 கிறாம், 3 கிலோ அயிசிங் சீனி, 1 கிலோ ஜெலி கிறிஸ்டல், ஜேம் கப், புஃட் டிரே, சாதாரண யோகட், 500 கிராம் ஜெலி கிறிஸ்டல், 100 கிராம் ஜெலி கிறிஸ்டல், 30 கிராம் ஜெலட்டின், 1 கிலோ ஜெலட்டின், ஆர்எல்/220/30 றிங்கிங் கப், அச்சிடப்படாத 80 மி. லீ. கப், அச்சிடப்படாத 100 மி. லீ. கப், அச்சிடப்படாத 60 மி. லீ. கப், அச்சிடப்படாத 25 மி. லீ. கப், 125 மி. லீ. கப், 80 மி. லீ. கப் - கபில நிறம் மற்றும் பி/டபிள்யூ, எப்எல்/400/80 டிரிங்கிங் கப், 220 மி. லீ. பேப்பர் கப், 330 மி. லீ. பேப்பர் கப்.

